**<u>DEPOSITION OF WITNESS</u>**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: STC 338/2023
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW1
Defendant :
Court :

| | | |
|---|---|---|
| Name | : | அழகு |
| Father's Name | : | வீரணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

12.1.2024 STC 338/2023 அ. சா.1 அழகு ஆஜர்

**முதல் விசாரணை:**

1. நான் எஸ்.வாகைகுளத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி கருப்பசேணாதிபதி எனது மகன் ஆவார். சாட்சி முத்துராமலிங்கம், முத்துலெட்சுமி, கிருஷ்ணன் ஆகியோர்களை தெரியும். சாட்சி முத்துலெட்சுமி எனது மனைவி ஆவார். எதிரி பழனிசாமியை தெரியும். **(எதிரி மனுவின் பேரில் ஆஜரில் இல்லை.)**

2. கடந்த 8.12.2022ம் தேதி எனது ஆட்டுக்குட்டிகளை ஊருக்கும் வடக்கே உள்ள உடையளேரி கண்மாய் பகுதியில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தேன். ஆடு மேய்த்துக்கொண்டிருக்கும்போது எனக்கு லேசாக கிறுகிறுப்பு வந்ததால் வீட்டிலிருந்த எனது மகன் கருப்புசேனாதிபதிக்கு போன் செய்து

இருசக்கரவாகனத்தை எடுத்துவரும்படி சுமார் மாலை 3.45 மணியளவில் சொன்னேன். வீட்டில் இருந்து என் மகன் புறப்பட்டு எங்களுக்கு சொந்தமான ஹீரோ ஸ்பிலண்டர் TN 63 BA 7607 இருசக்கர வாகனத்தில் புறப்பட்டு வரும்போது எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் எதிரே தெற்கிலிருந்து வடக்கு நோக்கி எனது மகன் வரும்போது எதிரே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த 7-ம் நம்பர் அரசு நகர பேருந்து அதிவேகமாக பேருந்தை ஓட்டி வந்து எனது மகன் ஓட்டிச்சென்ற இருசக்கரவாகனத்தின் மீது மோதிவிட்டது.

3. அருகில் விவசாயம் பார்த்துக்கொண்டிருந்த முத்துராமலிங்கம் என்னை கைபேசியில் அழைத்து என் மகனுக்கு விபத்து நடந்ததை சொன்னார். நான் உடனே சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தபோது என் மகன் காயத்துடன் கீழே விழுந்து கிடந்தார். நான் பார்த்தபோது என் மகனுக்கு நெற்றியில் முன் பகுதியில் மண்டை ஓடு நெறிந்து காயம்ஏற்பட்டிருந்தது. வலது கால் எலும்பு முறிவுடன் இருந்தது. பின்னர் 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்து திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு முதலுதவி சிகிச்சை செய்து அங்கிருந்து மேல்சிகிச்சைக்கு மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள்.

4. எனது மகன் 3-4 மாதங்களாக மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். என் மகனை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு அங்கு சிகிச்சையிலிருந்தபோது பழையனுர் போலீஸார் 9.12.2022ம் தேதி காலை 10.00 மணியளவில் அங்கு வந்து விசாரித்தார்கள். அப்போது நான் இது சம்மந்தமாக புகார் கொடுத்தேன். அந்த சமயம் என் மகன் பேசமுடியாமல் மயக்க நிலையில் இருந்தார். எனவே நான் புகார் கொடுத்தேன்.என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. புகாரில் சாட்சியாக எனது மைத்துனர் கிருஷ்ணன் கையொப்பம் செய்தார். அரசு பேருந்தின் பதிவெண் TN 63 N 1461 ஆகும். பேருந்தை ஓட்டி வந்த நபர் பெயர் பழனி ஆகும். அவர் மேலுர் பக்கம் என்று சொன்னார்கள். விபத்து நடந்த போது மாலை சுமார் 4.30 மணி இருக்கும். இந்த விபத்திற்கு அரசு பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநர் வாகனத்தை அதிவேகமாக கவனமில்லாமல் ஓட்டிவந்ததுதான் காரணமாகும். எனது மகன் ரோட்டின் இடது ஓரமாக

மெதுவாகதான் சென்றுள்ளார். போலீஸார் இவ்வழக்கு தொடர்பாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1.நான் சம்பவம் நடக்கும்போது உடையநேரி கண்மாயில் ஆடுமேய்த்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். சம்பவ நடந்த இடத்திற்கும், உடையநேரி கண்மேயும் பக்கம் என்றால் அரை பர்லாங்கு தூரம் இருக்கும். விபத்து நடந்தது முத்துராமலிங்கம் போன் செய்துதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். முத்துராமலிங்கம் சொன்னார்.

2. நான் சம்பவம் நடந்த எவ்வளவு நேரத்தில் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் 10 நிமிடத்தில் வந்தேன். நான் வந்து பார்த்தபோது என் பையன் மயக்க நிலையில் இருந்தார் என்றால் சரிதான். என் பையன் மயக்க நிலையில் இருந்ததால் விபத்து எப்படி நடந்தது என்பதை அந்த சமயம் என் மகன் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். என் பையனுக்கு எத்தனை நாட்கள் கழித்து மயக்கம் தெளிந்தது என்றால் 3 நாட்கள் கழித்து மயக்கம் தெளிந்தது.

3. 3 நாட்கள் கழித்து விபத்து எப்படி நடந்தது என்று என்னிடமும், போலீஸாரிடம் என் மகன் சொன்னார் என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி குறுகிய பகுதி என்றால் அகலமான பகுதியாகும். ரோடு ஒரு வழிபாதை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் வீடுகள் இல்லை என்றால் கோவில், நாடகமேடை உள்ளது. என் மகனுக்கு வாகனம் ஓட்ட உரிமம் இல்லை என்றால் சரிதான். வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் வேண்டும் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை.

4. புகாரை யார் எழுதியது என்றால் மருத்துவமனையில் பார்க்கவந்தவர்கள் மூலம் நான் சொல்லி எழுதிகொடுத்தார். புகார் சம்பவம் நடந்த மறுநாளே எழுதியது என்றால் சரிதான். நான் சம்பவ நடந்த இடத்தில் எனது மகனின் இருசக்கரவாகனத்தையும், பேருந்தையும் பார்த்தேன் என்றால் சரிதான். பேருந்தில் எந்த பகுதியில் என் பையன் ஓட்டி வந்த வாகனம் மோதியது என்றால் ஓட்டுநர் அமரும் பகுதியில். சம்பவ இடம் வளைவுகள் உள்ள பகுதி என்றால் ஒரே நேரான பகுதியாகும். என் மகன் என்னுடன் கைபேசியில் பேசிக்கொண்டே இருசக்கரவாகனம் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல.

5. என் பையன் அதிவேகமாக ஓட்டி வந்து பேருந்தில் மோதிவிட்டார் என்றால்

சரியல்ல. கோவில் உள்ள இடம் என்பதால் பேருந்து மெதுவாகதான் வரும் என்றால் வேகமாக வரும்இடம்தான். இருசக்கரவாகனம் வேகமாக வர வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்பில்லை. வாகனத்தின் பதிவெண், ஓட்டுநர் பெயர் யார் சொன்னார்கள் என்றால் காவல்நிலையத்தில் இருந்துதான் சொன்னார்கள். விபத்து பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றாலும், எனது மகனின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

6. காயம்பட்ட நபர் எனது மகன் என்பதால் என் மகனுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தசம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.

**<u>DEPOSITION OF WITNESS</u>**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**
\- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: STC **338**/2023
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW2
Defendant :
Court :

Name : கருப்பசேனாதிபதி

Father's Name : அழகு

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

12.1.2024 ST**C** 338/2023 அ. சா.2 கருப்பசேனாதிபதி ஆஜர்

**முதல் விசாரணை:**

1. நான் எஸ்.வாகைகுளத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா ஆவார். சாட்சி முத்துராமலிங்கம், முத்துலெட்சுமி, கிருஷ்ணன் ஆகியோர்களை தெரியும். சாட்சி முத்துலெட்சுமி எனது அம்மா ஆவார். எதிரி பழனிசாமியை தெரியும். **(எதிரி மனுவின் பேரில் ஆஜரில் இல்லை.)**

2. கடந்த 8.12.2022ம் தேதி மாலை 3.45 மணியளவில் எங்கள் ஊர் உடையநேரி கண்மாயில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தபோது என் அப்பா எனக்கு கைபேசியில் அழைத்து தனக்கு மயக்கம் இருப்பதால் என்னை உடனே வருமாறு சொன்னார். எங்கள் வீட்டிலிருந்த ஹீரோ ஸ்பிலன்டர் TN 63 B 7607 இருசக்கர வாகனத்தில் புறப்பட்டு வரும்போது **(சாட்சி பின்வருமாறு மாற்றி கூறுகிறார்.)** TN 63 BA 7607 என்ற வாகனத்தில் எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் அருகே மாலை 4.30 மணியளவில் நான்

தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வரும்போது திருப்புவனத்திலிருந்து வாகைகுளம் நோக்கி வடக்கிலிருந்து தெற்காக வந்த அரசு நகர பேருந்து TN 63 1461 என்ற 7-ம் நம்பர் பேருந்து அதிவேகத்துடன், கவனக்குறைவாக பேருந்தை ஓட்டி வந்து நேராக எனது இருசக்கரவாகனத்தில் மோதிவிட்டார்.

3. அரசு பேருந்து மோதியதில் நான் கீழே விழுந்துவிட்டேன். எனக்கு தலையின் முன் பகுதியில்(நெற்றி) மண்டை ஓடு எலும்பு நொறுங்கியது. வலது காலில் முழங்காலுக்கு கீழே இரண்டாக நொறுங்கிவிட்டது. அரசு பேருந்தை ஓட்டி வந்தவர் பெயர் பழனிச்சாமி என்றும், அவர் மேலூர் பக்கம் காந்திநகரைச் சேர்ந்தவர் என்றும் தெரிந்துகொண்டேன். அரசு பேருந்தின் ஓட்டுநரை சம்பவ சமயத்தில் பார்த்தேன். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் கூறமுடியும். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. நான் காயம்பட்ட சிறிது நேரத்தில் நான் மயக்கமாகிவிட்டேன்.

4. மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் எனக்கு மயக்கம் தெளிந்தது. எனது தகப்பனார் சம்பவஇடத்திற்கு வந்து என்னை 108 அவசர ஊர்தியில் திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தார்கள். மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் நான் சுமார் 4 1/2 மாதம் சிகிச்சையிலிருந்தேன். சிசிச்சையில் எனக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு எலும்பை நீக்கியுள்ளார்கள். கால் எலும்புமுறிவு இன்று வரை சரியாகவில்லை. என்னால் சரியாக நடக்கமுடியாது. அடிக்கடி தலைவலி ஏற்படுகிறது. **(சாட்சி தன் காலின் வீக்கத்தையும், தலையின் முன் நெற்றியில் எலும்பு நீக்கப்பட்டு இருந்ததையும் காட்டினார்.)**

5. விபத்திற்கு அரசு பேருந்தின் ஓட்டுநர் அதிவேகத்துடன், கவனக்குறைவாகவும் வலது புறம் ஏறி ஓட்டிவந்து மோதியதுதான் காரணமாகும்.

**(எதிரியை அடையாளம் காட்ட வேண்டி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.